Registered as a Newspaper

விலை ரூபா 7.00


# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 28 | 11-05-2003 | புதன்கிழமை | ஓசை 113

அழகன்
மறுதோன்றிப் பதிப்பகம்
சிறந்த முறையில் குறித்தவேளையில்
நீங்கள் விரும்பிய வர்ணங்களில் கணனி முறையிலும்
அச்சுப் பதிப்புவேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய
ஒரே பதிப்பகம்
யாழ் சாலை,
கிளிநொச்சி.



# அரசியல் ஆலோசகர் பாலசிங்கத்தை யசுகி அகாஷி லண்டனில் சந்திப்பார்!

## டோக்கியோ மாநாடு பற்றி விளக்கப்படும்

(லண்டன்)

**ஜப்பானிய விசேட தூதுவர் யசுகி அகாஷி லண்டனுக்குச் சென்று விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களைச் சந்திக்கவுள்ளார். டோக்கியோவில் இரு தினங்கள் நடைபெற்ற உதவி வழங்குவோர் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் குறித்து ஜப்பானிய விசேட தூதுவர் இதன் போது எடுத்துக்கூறுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.**

இதுகுறித்து நேற்று டோக்கியோ மாநாட்டின் நிறைவில் பத்திரிகையாளரைச் சந்தித்து கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தப்பத்திரிகையாளர் மாநாட்டில் அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சாட் ஆர்மிரேஜ், நோர்வே வெளிவிவகார அமைச்சின் செயலாளர், ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி, அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சமாதான முயற்சிகளில் சிறிலங்கா பிரதமர் சனாதிபதி, விடுதலைப்புலிகள் ஆகியோர் இணைந்து செயலாற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# கண்காணிப்புக்குழுத் தலைவர் இவ்வாரம் வன்னி வருகிறார்

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் இந்தவாரம் வன்னிக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

திருகோணமலை பாலம் போட்டாறில் விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்ட கடற்படைச் சிப்பாயின் விடுதலை குறித்து பேச்சுவார்த்தை நடத்தவே இவர் இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர் வன்னி வந்து விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்த விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# புலிகளுடன் பேச்சை மீண்டும் ஆரம்பிக்க எனது அரசு முயற்சி எடுக்கும்

## டோக்கியோ மாநாட்டில் ரணில்

(லண்டன்)

விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க தமது அரசு முயற்சி எடுக்கும் என சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

டோக்கியோ மாநாட்டின் முடிவில் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

டோக்கியோ மாநாட்டில் கலந்து கொண்ட 51 நாடுகளுக்கும் 21 அமைப்புக்களுக்கும் பிரதமர் ரணில் நன்றி தெரிவித்துள்ளார்.

மாநாட்டில் விடுதலைப்புலிகளின் பங்கேற்பு இல்லாமை குறித்து வருத்தம் தெரிவித்துள்ளதோடு இம்மாநாட்டின் மூலம் கிடைக்கப் பெறவுள்ள 450 கோடி

(08ஆம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பி. அலுவலகத்தின் மீது திருமலையில் கைக் குண்டுவீச்சு

(திருகோணமலை)

திருகோணமலையில் ஈ.பி.டி.பி. அலுவலகம் நேற்று இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை-உள்துறைமுக வீதியிலுள்ள ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது கைக்குண்டு ஒன்று வீசப்பட்டுள்ளதுடன் இதனால் அலுவலகம் பலத்த சேதமடைந்துள்ளது.

இந்த அலுவலகத்தில் பணியாற்றிவந்த எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

துவிச்சக்கரவண்டியில் சென்ற நபர் ஒருவரே குண்டை வீசிவிட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழு. வெள்ளவத்தையில் இரு இளைஞர்கள் கைது

(கொழும்பு)

கொழும்பு - வெள்ளவத்தையில் இரண்டு இளைஞர்களை சிறிலங்காப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

வீதியால் சென்றுகொண்டிருந்த முச்சக்கரவண்டியை சோதனையிட்ட பொலிசார் அதிலிருந்தவர்களை சோதனையிட்ட சமயம் அதிலிருந்த இரண்டு இளைஞர்களில் ஒருவர் சயனைட் உட்கொண்டார். இதனையடுத்து அவர் கொழும்பு தெற்கு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். மற்றையவர்

(08ஆம் பக்கம் பார்க்க)

# டோக்கியோவில் வழங்கப்பட்ட கடனுதவி இலங்கையரை மேலும் கடனாளியாக்கியுள்ளது

## பொ.ஐ.மு.பா.உ. சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

டோக்கியோவில் வழங்கப்பட்ட கடனுதவி ஏற்கனவே கடன்பட்டுள்ள இலங்கையை மேலும் கடனுக்குள் தள்ளுகின்ற ஒரு நிலைமையாகும் என பொதுசன ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.

டோக்கியோவில் வழங்கப்பட்டுள்ள உதவித் தொகையில் 90வீதமானவை கடன் தொகையாக உள்ளது எனவும் அது கூறியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் நேற்று உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சரத்

(08ஆம் பக்கம் பார்க்க)

# குடத்தனையில் பொலிஸ் நிலையம் அமைக்க முயற்சி!

வடமராட்சி-குடத்தனைப் பகுதியில் புதிய பொலிஸ் நிலையம் அமைக்கும் முயற்சியில் சிறிலங்கா பொலிசார் ஈடுபட்டுள்ளனர். இப்பகுதியிலுள்ள சனசமூக நிலையக் கட்டடத்தில் பொலிஸ் நிலையம் அமைக்கத் தரும்படி படையினர் கோரிக்கை விடுத்தனர். இந்தக் கோரிக்கையை சனசமூக நிர்வாகம் நிராகரித்திருந்தது. இந்நிலையில் புதிய இடத்தைத் தெரிவு செய்து பொலிஸ் நிலையம் அமைக்கும் முயற்சியில் சிறிலங்காப் பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

# ஜப்பானிய மாநாடு குறித்து எனக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை

## சனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

டோக்கியோ மாநாடு தொடர்பாக தமக்கு அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்று சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இதனாலேயே டோக்கியோ மாநாட்டிற்கு எந்தவித குறிப்பையும் அளிக்கவில்லை என்றும் சனாதிபதி கூறியுள்ளார். டோக்கியோ மாநாட்டின் ஆர

(08ஆம் பக்கம் பார்க்க)

# சிறி. சனாதிபதி-பிரதமர் தம்மிடையே பிரச்சினையைப் பேசித்தீர்க்க வேண்டும்

## அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சர் ஆர்மிரேஜ்

வடக்கு-கிழக்கின் அபிவிருத்திக்காக பிரத்தியேகமான கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவது குறித்து பிரதமரின் முடிவு சரியானது என அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சர் றிச்சட் ஆர்மிரேஜ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சமாதானப் பேச்சுக்களில் புலிகளும் அரசும் மீண்டும் கலந்து கொள்ள வேண்டும் என்பதையே சர்வதேச சமூகம் விரும்புவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். டோக்கியோ மாநாட்டிற்குப் பின்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பிரதமர் நேற்று முன்தினம் அறிவித்தமையைத் தொடர்ந்து ஆச்சரியம் அடைந்த அதேவேளை மகிழ்ச்சி அடைவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். இது சரியான திசையை நோக்கி எடுக்கப்பட்ட ஒரு நல்ல முடிவு என நினைப்பதாகக் கூறிய அவர் சனாதிபதியும், பிரதமரும் தமக்கிடையே இருக்கின்ற கருத்து வேற்றுமைகளை இரகசியமாக வைத்திருக்காமல் வெளிப்படையாகப் பேசித் தீர்த்துக் கொள்ள

(08ஆம் பக்கம் பார்க்க)

# ஜப்பானில் நடந்த வன்முறைக்கும் எமக்கும் தொடர்பில்லை!

## ஜே.வி.பி. அறிவிப்பு

(கொழும்பு)

ஜப்பானிலுள்ள லிலக்காஜே விகாரையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்ட நிகழ்வின் போது இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்திற்கும் தமது உறுப்பினர்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று ஜே.வி.பி. தெரிவிக்கிறது. இந்தவிகாரைக்கு பிரதமர்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும்பல தரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3275)

# பிளாஸ்ரிக் கழிவுப் பொருட்கள் கிளி.யில் கொள்வனவிற்கு ஏற்பாடு!

(அலுவலக செய்தியாளர்)

சூழல் பாதுகாப்புத் தினத்தினை முன்னிட்டு கிளிநொச்சி தமிழர் புனர்வாழ்வுக்கழகம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், மற்றும் கிளிமாவட்ட அரசியல் துறையினரால் மாவட்டத்தில் கிராமரீதியாக கழிவுப்பொருட்களான பொலித்தீன் பைகள் மற்றும் பிளாஸ்ரிக் பொருட் கள் அகற்றும் பணிகள் மற்றும் கருத்தரங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி சேகரிக்கப்படும் பொருட் களில் ஒரு கிலோ பொலித்தீன்களுக்கு 100 ரூபாவும் ஒரு கிலோ பிளாஸ்ரிக் பொருட்களுக்கு 50 ரூபாவும் மேற்படி நிறுவனத் தினரால், சேகரித்துக் கொடுக்கப்படுபவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.



நேற்றைய தினம் கிளி.அரச செயலகத்தில் நடைபெற்ற அத்தியாவசியக் கூட்டத்தில் வைத்து கிளி. மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த ஜெகாஸ் அவர்களினால் கருத்துரை வழங்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து மாவட்ட செயலக ஊழியர்களினால் செயலக வளாகத்திலிருந்து சேகரிக்கப்பட்ட பொலித்தீன் பொருட்கள் நேற்று பி.ப.1.30 மணிக்கு கிளி அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்களினால் கிளி.மாவட்ட த.பு.க.சேர்ந்த ஜெராட்டிடம் கையளிக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# முல்லையில் ஆரம்பம்

முல்லைத்தீவு பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் மருதம் மரக்கறி வாணிபம் கடந்த 04ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. நிறுவனத்திற்கான பெயர் பலகையினை நிதித்துறைப் போராளி ஒருவர் திறந்து வைத்தார் கட்டிடத்தினை முல்லைத்தீவு காவல் பணிமனைப் பொறுப்பாளர் சுந்தரலிங்கன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். வியாபாரத்தினை முல்லைப் பிர தேச வர்த்தக சங்கத் தலைவர் செ. உதயகுமார் ஆரம்பித்து வைத்தார். (20)

## - பரந்தன் சந்திப் பகுதியில் -
# மீன் அங்காடி அமைக்க அரசாங்க அதிபர் பணிப்பு

(அலுவலக செய்தியாளர்)

பரந்தன் மத்திய சந்திக்கருகாமையில் மீன் அங்காடியினை ஆரம்பிப்பதற்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு நேற்று கிளி. அரச செயலகத்தில் நடைபெற்ற கிளி. மாவட்ட அத்தியாவசிய சேவைகள் கூட்டத்தில் வைத்து கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம் கிளி. கரைச்சி பிரதேச சபையினருக்கு பணிப்புரையினை விடுவித்தார். இதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்வதுடன் எதிர் வரும் 25ஆம் திகதிக்கு முன் பரந்த னில் மேற்படி மீன் அங்காடி ஆர ம்பித்து வைக்கப்படவேண்டுமென கரைச்சி பிரதேச சபை விசேட ஆணையர், சபை செயலர் ஆகியோருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (சோ)

## பா.உ. பயணம் செய்த வாகனம் விபத்தில்

பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே பயணம் செய்த வாகனம் புத்தளத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன் போது ஏற்பட்ட சேதவிபரம் தெரிய வரவில்லை.

## புனித அந்தோனியார் ஆலயத் திருநாள் – அளம்பில்

12.06.2003 வியாழன் மாலை 5.30 மணிக்கு செபமாலையும் தொடர்ந்து திருப்பலியும் நற்கருணை வழிபாடும் பவனியும் இடம்பெறும்.

13.06.2003 வெள்ளி காலை 7.00 மணிக்குத் திருநாள் திருப்பலியும் புனிதரின் திருச்சுருப பவனியும் ஆசீரும் இடம்பெறும்.

போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கோடி அற்புதரின் ஆசீர் பெற்றுச் செல்லுங்கள்.

பங்கு மக்களும்,
பங்குத் தந்தையும்.

(3230)

# பள்ளிக்குடாவில் சூறாவளியினால் 300 குடும்பங்களுக்குப் பாதிப்பு

(அலுவலக செய்தியாளர்)

அண்மையில் ஏற்பட்ட சூறாவளியினால் கிளி. மாவட்ட பூநகரி பள்ளிக்குடாவைச் சேர்ந்த மீனவக்குடும்பங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. மேற்படி பகுதிகளிலுள்ள மக்களின் வீட்டுக் கூரைகள் சூறாவளியினால் தூக்கி எறியப்பட்டு சேதமடைந்துள்ளதுடன் அப்பகுதி தொழிலாளர்களின் மீன் பிடிப்படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இதன் காரணமாக அப்பகுதியைச் சார்ந்த 300 குடும்பங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. மேற்படி குடும்பங்களுக்கு 50 லட்சத்திற்கும் மேற்பட்டதான சேத அழிவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் கிளி. மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்கட்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது என பள்ளிக்குடா கடற்றொழிலாளர் சங்கத்தினர் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளனர். (சோ)

## சாவு அறிவித்தல்

முல்லைத்தீவு உணாப்பிலவைப் பிறப்பிடமாகவும் முள்ளியவளை முதலாம் வட்டாரத்தை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியை நாகநாதன் பாலராணி அவர்கள் 09.06.2003 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிக்கிரியை 11.06.2003 புதன்கிழமை (இன்று) பி.பகல் 2.00 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்: : சி. சிவநேசன்
1ஆம் வட்டாரம்,
முள்ளியவளை.

(3231)

## சாவு அறிவித்தல்

### திரு. கந்தையா - குகானந்தராஜா

திரு. கந்தையா – குகானந்தராஜா காலமானார். முன்னாள் கிளிநொச்சி கிராமத் தலைமைக்காரன் காலஞ்சென்ற முகாந்திரம் சின்னையா வெற்றிவேலு விதானையாரின் பேரனும், காலஞ்சென்ற கிராமத்தலைமைக்காரன் செல்லத்துரை – கந்தையா,திருமதி கந்தையா – சாந்த நாயகி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் கந்தையா – குகானந்தராஜா ஜேர்மனியில் கடந்த 08.06.2003இல் மரணமானார். அன்னார் காலஞ்சென்ற டாக்டர் விவேகானந்தன், சச்சிதானந்தன், சிவானந்தராஜா லண்டனில் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை (நவம்) திருமதி குகனேஸ்வரி, திருமதி கௌரிதேவி ஆகியோரின் சகோதரனும் மற்றும் திருமதி பங்கையர்க்கரசி (கனடா), திருமதி தவமணிதேவி, திரு.தர்மபாலன் (கிராம சேவையாளர் நாவாந்துறை), திரு. பரமேஸ்வரன் (ஜேர்மனி) திருமதி அமிர்தகௌரி நவம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"திருவருள்"
இல 16 சிவசுந்தரம் வீதி,
(பரவிப்பாஞ்சான்)
கிளிநொச்சி.

தகவல் தருபவர்,
திரு. திருமதி தர்மபாலன்
சகோதரியும் மைத்துனனும்.
(கிராம சேவையாளர் நாவாந்துறை)

(3316)

## கலந்துரையாடல்

எதிர்வரும் 16.06.2003 அன்று அதிபர்கள், சாரண ஆசிரியர்களுக்கான சிறப்புக் கலந்துரையாடல் புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாலய மண்டபத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் அனைத்து சாரண ஆசிரியர்களையும், அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு முல்லை மாவட்ட சாரண உதவி ஆணையாளர் வே.ஜெயம் சபாபதி கேட்டுக் கொள்கின்றார். (20)

## 90ஆம் நாள் நினைவும் அந்தியேட்டிக் கிரியையும்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 13 |  | 15 |
| □ | | □ |
| 05 | | 03 |
| □ | | □ |
| 1955 | | 2003 |

### அமரர் திரு. நல்லதம்பி இராசகுலசிங்கம் (வவா)
நாச்சிக்குடா-விசுவமடு

மாதம் மூன்று கடந்தாலும்
மறக்குமா உன்முகம் அப்பா
மாநிலத்தில் நாமிருக்கும் வரை
மாறாது உங்கள் நினைவு

அன்னாரது இறைபதப்பேறு குறித்து அந்தியேட்டி ஆத்ம சாந்திக் கிரியைகள் 12.06.2003 வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஆத்ம சாந்திக் கிரியைகளில் பங்குகொண்டு மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

நாச்சிக்குடா,
விசுவமடு.

(3315)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி. வேலுப்பிள்ளை தங்கம்மா

எமது வன்னிப் பிரதேச முகாமையாளர் திரு. வே. ஐயம்பெருமாள் அவர்களின் அன்புத்தாயார் திருமதி வேலுப்பிள்ளை தங்கம்மா அவர்கள் 05.06.2003 அன்று சிவபதமெய்திய செய்தி கேட்டு நாங்கள் அனைவரும் மனம் கலங்கி நிற்கின்றோம்.

அவரது பிரிவுத் துயரால் கலங்கி நிற்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி எங்கள் கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.

முகாமையாளர், ஊழியர்கள்,
இலங்கை வங்கி,
கிளிநொச்சி,
முல்லைத்தீவு,
மாங்குளம்.

(சி-8153)

## 1.6 லட். குழந்தைகளுக்கு தடுப்பு மருந்தில்லை!

ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இன்றுவரை ஈராக்கில் ஒரு இலட்சத்து அறுபது ஆயிரம் குழந்தைகள் பிறந்துள்ளன.

இதுவரை இந்தக் குழந்தைகளுக்கான ·தடுப்பூசி மருந்துகள் எவையும் வழங்கப்படவில்லை. ஈராக்கில் தற்போதே மிகவும் மோசமான மருந்துப் பற்றாக் குறை நிலவிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திட்டமிட்டதற்கு மாறாக வெள்ளை மாளிகையில் சனாதிபதி புஷ் - துணைப் பிரதமர் அத்வானி சந்திப்பு!

## - பாகிஸ்தான் சனாதிபதியும் விரைவில் பயணம்



பாக்தாத்தில் ஒசாமா பின்லேடன், சதாம் ஹுசைன் ஆகியோரின் உருவப் படங்களை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் ஈராக்கியர்.

**அமெரிக்காவுக்கான உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள இந்திய துணைப் பிரதமர் எல்.கே. அத்வானியை நேற்று சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் சந்தித்துப் பேசினார். திட்டமிடப்பட்டதற்கு மாறாக முன்கூட்டியே நடைபெற்றுள்ள இச்சந்திப்பில் இந்தியாவுக்குள்ள பிரச்சினைகள் குறித்து விரிவாக எடுத்துக் கூறப் பட்டுள்ளது. அதேவேளை, பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஸ் முஷாரப்பும் விரைவில் அமெரிக்கப் பயணம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார்.**

பாகிஸ்தானின் எல்லை தாண்டிய பயங்கரவாதம் குறித்தும் இந்தியா மேற்கொண்டு வரும் அமைதி முயற்சிகள் பற்றியும் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிளியூ, புஷ்சிடம் துணைப் பிரதமர் அத்வானி முக்கிய பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

அமெரிக்காவுக்கு ஒரு வார காலம் பயணம் சென்றிருக்கும் துணைப் பிரதமர் அத்வானி அந்நாட்டுத் தலைவர்களை சந்தித்து வருகிறார்.

இவர்களுடன் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் இரு நாடுகளும் ஒருங்கிணைந்து செயற்படுவது குறித்து விவரித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து வெள்ளை மாளிகையில் சனாதிபதி ஜோர்ஜ் புஷ்சை சந்தித்த அத்வானி, பாகிஸ்தானின் எல்லை தாண்டிய பயங்கரவாதம் பற்றியும் இந்தியா மேற்கொண்டிருக்கும் அமைதி முயற்சிகள் பற்றியும் எடுத்துரைத்துள்ளார்.

சுமார் அரை மணிநேரம் நீடித்த இச்சந்திப்பிற்கு பின்னர், செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த அத்வானி எல்லைதாண்டிய பயங்கரவாதம் குறித்த கவலைகளையும், பிரச்சினைகளையும் அமெரிக்க சனாதிபதியுடன் பகிர்ந்து கொண்டதாகக் கூறியுள்ளார்.

இது இவ்வாறிருக்க ஈராக் நாட்டிற்கு இந்தியப் படைகளை அனுப்புவது குறித்து பேச்சு நடத்த அமெரிக்க பாதுகாப்புத் துறையின் அதிகாரிகள் அடுத்த வாரம் டில்லிக்கு வரவுள்ளதாகவும் அத்வானி கூறியுள்ளார்.

பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப், இன்னும் சில தினங்களில் அமெரிக்கா செல்லவுள்ள நிலையில், ஏற்கனவே திட்டமிட்டதற்கு முன்னதாகவே சனாதிபதி புஷ் அத்வானியை சந்தித்துப் பேசி இருப்பது குறிப்பிடத் தக்கது.

## ஐ. நா. விசேட தூதுவர் சுகி அம்மையாருடன் பேச்சு

மியான்மாரில் இராணுவ ஆட்சியாளர்களால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எதிர்க் கட்சித் தலைவி ஆங் சாங் சுகியை மியான்மாருக்கான ஐக்கிய நாடுகள் சபை விசேட தூதுவர் ரசானி இஸ்மாயில் நேற்று சந்தித்துப் பேசினார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள சனநாயக ஆதரவாளரின் உடல் நலத்துக்குப் பாதகம் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுகியின் ஆதாவாளர்களுக்கும் இராணுவ ஆட்சியாளர்களுக்கும் இடையில் நடைபெற்ற மோதலைத் தொடர்ந்தே அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

ரசானி தலைநகர் யாங்கூனில் உள்ள இராணுவ ஆட்சியாளரின் தலைமையகத்தில் ஆங் சாங் சுகியை சந்தித்துள்ளார். இச் சந்திப்பு ஒரு மணித்தியாலம் வரை நீடித்தது.

# அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்க இந்தியா இழுத்தடித்து வருகிறது!

## - பாகிஸ்தான் குற்றச்சாட்டு

அமைதிப் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதில் இந்தியா தாமதம் செய்வதாகப் பாகிஸ்தான் குற்றம்காட்டியுள்ளது.

இரு தரப்பும் அமைதிப் பேச்சுவார்த்தையைத் தொடங்க விரும்பம் தெரிவித்துள்ளன. அதுடன் நிறுத்தப்பட்ட பேருந்து, ரயில், விமான போக்குவரத்தும் ஆரம்பமாகவுள்ள நிலையில் பாகிஸ்தான், அரசின் வெளியுறவுச் செய்தித் தொடர்பாளர் மவுஸ்கான், இந்தியா அமைதிப் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதில் தாமதப்படுத்துவதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

தாமதிப்பதை கைவிட்டு நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையைத் தொடங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

ஆனால், பாகிஸ்தானின் இந்தக் குற்றச்சாட்டை நிராகரிக்கும் வகையில், ஜம்மு - காஷ்மீரில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அமைதிப் பேச்சுவார்த்தையைத் தொடங்க இந்தியா விதித்த நிபந்தனையின்படி, எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை நிறுத்த பாகிஸ்தான் தவறிவிட்டதாக அவர் குற்றம் சாட்டியதுடன், இந்தியாவிற்குள் பாகிஸ்தான் தீவிரவாதிகள் தொடர்ந்து ஊடுருவி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

# லைபீரியாவில் யுத்தத்திற்கு முடிவுகட்ட மேற்காபிரிக்கத்தலைவர்கள் முயற்சி

## தலைநகர் நோக்கி கிளர்ச்சியாளர்கள் முன்னேற்றம்


(மொன்ரோவியா)

லைபீரியாவில் தொடர்ந்து நான்காவது நாளாக நடக்கின்ற உள்நாட்டு யுத்தத்திற்கு முடிவு கட்டும் முயற்சிகளில் மேற்காபிரிக்கத் தலைவர்கள் ஈடுபட உள்ளதாகத் தெரியவருகிறது.

அந்நாட்டின் பிரதான கிளர்ச்சிக்குழுவொன்று தலைநகரைக் கைப்பற்றுவதற்காக கடும் தாக்குதல் நடத்திவருகிறது.

இந்நிலையில் சனாதிபதி சான்ஸ்ரெயிலருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை நடத்தும் முயற்சிகள் கானாவில் நடைபெறுகின்றன.

தலைநகர் மொன்ரோவியாவில் இரத்தக்களரியைத் தடுத்து நிறுத்தும் இறுதி முயற்சியாக இரு தரப்பையும் போர்நிறுத்த உடன்படிக்கையில் இணையச் செய்ய மேற்காபிரிக்கத் தலைவர்கள் லைபீரியா செல்ல உள்ளனர்.



சிரிய எல்லைப் பகுதியில் மேலும் ஒரு அமெரிக்கப் படைவீரர் கொல்லப்பட்டதை அடுத்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அமெரிக்க படையினர் ஈராக்கியர் ஒருவரை சோதனையிடுகிறார்.

# கரசேவக சங்கத்தின் அறிவிப்பால் பா.ஜ.கட்சிக்குப் புதிய நெருக்கடி!

(புதுடில்லி)

அத்வானியின் தூண்டுதலினாலேயே பாபர் மசூதி இடிக்கப்பட்டதாக கரசேவக சங்கம் அறிவித்தமையினால் பாஜனதா கட்சிக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பாபர் மசூதியை இடிக்குமாறு அத்வானி உள்ளிட்ட பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர்கள் தான் தூண்டினார்கள் என்று அகில இந்திய அயோத்தி இராமர் கரசேவக சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இதனால் பா.ஜ. கட்சியினுள் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இந்தத் தலைவர்களின் தூண்டுதலினால் தான் மசூதியை இடித்ததாக இந்த வழக்கில் தொடர்புடைய 05 கரசேவகர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னர் லக்னோவில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டை பா.ஜ. கட்சி மறுத்துள்ளது.

ஆனால், கரசேவகர்கள் கூறியது உண்மைதான் என்றும் அத்வானி போன்றவர்கள் தூண்டுதலினாலேயே மசூதி இடிக்கப்பட்டதாக அகில பாரத அயோத்தியா ராமஞ்சூர் கரசேவக சங்க தேசிய அமைப்பாளர் வெங்கடஸ்விர ராவ் ஹைதராபாத்தில் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் இரவு கூறியுள்ளார்.



அமெரிக்க அரசுகளின் ஒன்றியம் அங்குரார்ப்பண வைபவத்தில் உரையாற்றும் சிலி நாட்டு சனாதிபதி ரிக்காடோ லாகோஸ்.

# கருக்கலைப்பிற்கு எதிரான சட்டம் அமெரிக்காவில் மீண்டும் அமுல்!

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் கருக்கலைப்பிற்கு எதிராகச் சட்டம் ஏற்படுத்தப்படவுள்ளது. இது தொடர்பாகப் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை 282-139 வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.

1973ஆம் ஆண்டு காலப் பகுதியின் போது கருக்கலைப்பது மனிதக் கொலை என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. மீண்டும் இந்தத் தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கருக்கலைப்பது மனித உரிமைகளில் ஒன்று என்ற தீர்மானமே நாட்டில் நடைமுறையில் இருந்தது.

குறித்த பிரேரணையின்படி கருக்கலைப்பதற்கு முயற்சி செய்யும் ஒரு வைத்தியர் இரு ஆண்டுகள் சிறையிலடைக்கப் படுவார். மேலும், சனாதிபதி புஷ்சும் இச்சட்டம் கொண்டு வரப் படுவதற்கு ஆதரவு நல்கியுள்ளார்.

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தன் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி பொதுசன ஐக்கிய முன்னணியின் மீது தாக்குதல் நடத்துவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவரது கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர். " சண்டிமல்லி" எனப்படும் தென்



ஆனால், பொலிஸ் திணைக்களத்திற்கு உட்பட்ட சனாதிபதியின் சொந்தப் பாதுகாப்புப் பிரிவு தொடர்ந்து சனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழேயே விடப்பட்டது. முப்படைகளின் தளபதியாக சனாதிபதி அரசியலமைப்பு ரீதியாக உள்ளமையால் ஏற்படக்கூடிய சிக்கலைக் கருத்திற்கொண்டு பொலிஸ் திணைக்களம் உள்துறை அமைச்சு என்ற புதிய அமைச்சின்கீழ் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டது.

இப்பொழுதும் முப்படைகளின் தளபதிகள் நியமனம், பதவி உயர்வுகள் என்பவற்றில் முடிவெடுக்கும் அதிகாரம் சனாதிபதியிடமே இருப்பதால் அவற்றில் சனாதிபதியின் செல்வாக்கே அதிகமாகக காணப்படுகின்றது. அரசியலமைப்பு ரீதியாக யுத்தத்தைப் பிரகடனப்படுத்தும் அதிகாரமும், நிறுத்தும் அதிகாரமும் சனாதிபதியின் வசமே உள்ளபோதும், இன்றுள்ள சர்வதேச அரசியல் நிலைமை அல்லது இலங்கை இனப்பிரச்சினை மீது சர்வதேசம் கொண்டுள்ள கரிசனை சந்திரிகாவின் அவ்வதிகாரத்தைப் பறித்துள்ளது எனலாம்.

ஆயினும் ஐக்கிய தேசிய முன்னணியின் வசமுள்ள பொலிஸ் அதிகாரம் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு குறிப்பாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குப் பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தியிருக்கிறது. சனாதிபதியின் பாது காப்புப் பிரிவின் முன்னாள் தலைவர் நிகால் கருணாரட்ன உட்பட பல அதிகாரிகள் தேர்தல் வன்முறைகள் மற்றும் பல வன்செயல்கள் தொடர்பாக குற்றஞ் சாட்டப்பட்டு, சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கின்றனர். வேறுசில பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் கைது செய்யப்படலாம் என்ற அச்சத்துடன் காலம் கழிக்கின்றனர். முன்னர் சட்

வலியுறுத்த வேண்டிய அவசியமில்லை. அவரது விருப்பமும் அதுதான்.

ஆனால்,அபிவிருத்தி லொத்தர் சபையைத் தன்வசப் படுத்திய விடயத்தில் தமக்குக் கிடைத்த சாதக, பாதக நிலைமைகள் குறித்து ஆராய வேண்டிய நிலையில் பொதுசன ஐக்கிய முன்னணி உள்ளது. உண்மையில் அது ஒரு பரீட்சார்த்த நடவடிக்கையாகவே பொ.ஐ.மு.வால் மேற்கொள்ளப்பட்டது. இம்முயற்சி சனாதிபதியினதும், பொதுசன ஐக்கிய முன்னணியினதும் பலவீன நிலையை ஒருங்கே வெளிக்காட்டியுள்ளது என்றே கூறவேண்டும்.

அபிவிருத்தி லொத்தர் சபையைப் பொறுப்பேற்றுக் கொண்டுவிட்டதாக சனாதிபதி அறிவித்து ஒருமாதகாலமாகியும் அதனை வர்த்தமானியில் பிரகடனம் செய்ய சனாதிபதியால் முடியவில்லை. அத்துடன் அபிவிருத்தி லொத்தர் சபைத் தலைவருக்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த பணிப்புரைகள் முற்றாக நிராகரிக்கப்பட்டுள்ளதுடன் அமைச்சரின் பணிப்புரைக்கு இணங்க மட்டுமே தம்மால் நடந்து கொள்ள முடியும் என அதன் தலைவர் திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்.

அரசியலமைப்பு ரீதியாகத் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தியே அபிவிருத்தி லொத்தர் சபையைத் தான் பொறுப்பேற்றதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருந்தாலும், வர்த்தமானி அறிவித்தலின்றியே தனது ஆணை செல்லுபடியாகும் என அவர் தெரிவித்தாலும் நடைமுறையில் எதுவுமே மாற்றத்திற்கு உள்ளாகி விடவில்லை.

# செல்லுபடியற்றதாகிவிட்ட நிறைவேற்று அதிகாரம்

மாகாணசபை அமைச்சர் எம்.கே.ரஞ்சித்தின் கொலை குறித்து ஆராயும் போதே அவர்கள் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இதன் அர்த்தம், உள்துறை அமைச்சை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொறுப்பேற்க வேண்டும் என்பதாகும். இந்தக் கொலையைத் தடுக்க உள்துறை அமைச்சுக்கு திறனில்லாது போய்விட்டது என்றும்,கொலை குறித்த விசாரணையில் கூட உள்துறை அமைச்சு பாரபட்சமாக நடக்கிறது என்பதும் இவர்களது வாதமாகும்.

இந்தக்கொலையையடுத்து உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர பொதுசன ஐக்கிய முன்னணி திட்டமிட்டது. ஆனால் அதனை நிறைவேற்றப் போதுமான வலு அதனிடம் இல்லாத நிலையில் அத்திட்டம் கைவிடப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில், ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. பின்னர் பாராளுமன்றத்திற்குள் பொதுசன ஐக்கிய முன்னணியினர் மலர்வளையங்களுடன் சென்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாகவே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் இவ்வாறு வலியுறுத்தப்பட்டது. சனாதிபதி சந்திரிகா உட்பட பொதுசன ஐக்கிய முன்னணியினருக்கு உள்துறை அமைச்சு தம்வசமில்லாதது மிகப்பெரிய சங்கடமாகும். ஐக்கிய தேசிய முன்னணி 2001 டிசெம்பரில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் அது பதவியேற்க சில தினங்கள் தாமதமடைந்தமைக்கு பாதுகாப்பு அமைச்சை சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வழங்க மறுத்தமை முக்கிய காரணமாகும்.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்தாலும் முப்படைகளுக்கும் தளபதி என்ற முறையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு இராணுவ, கடற்படை, விமானப்படை என்பவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இருக்கிறது. ஆனால் பொலிஸ் திணைக்களம் இதற்குள் உள்ளடங்காது வெளியேயே காணப்படுகிறது. எனவே பொலிஸ் திணைக்களத்தையும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்காக பாதுகாப்பு அமைச்சைத் தன்வசம் வைத்திருக்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரும்பியிருந்தார்.

ஆனால், ஐ.தே. முன்னணி விடாப்பிடியாக நின்ற காரணத்தினாலும், தேர்தலில் வெற்றி பெற்ற ஒரு கட்சியை ஆட்சியமைக்க அனுமதிக்காது விட்டால் இராஜதந்திர ரீதியாக சர்வதேச ரீதியில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுவிடுமென சனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் வழங்கிய ஆலோசனைக்கு அமைவாகவும், பாதுகாப்பு அமைச்சு ஐக்கிய தேசிய முன்னணிக்கு விட்டுக்கொடுக்கப்பட்டது.

டுப்பாடற்ற படையாக நினைத்ததை நடத்தி முடித்துக் கொண்டிருந்த சனாதிபதி பாதுகாப்புப் பிரிவு இப்பொழுது பல்லுப் பிடுங்கப்பட்ட பாம்பாக அடங்கிக்கிடக்கின்றது.

அதேவேளை, இந்த வன்செயல்கள் தொடர்பான விசாரணைகள் அவற்றில் தனது தொடர்புகுறித்த ஏதாவது பூதத்தைக் கிளப்பி விடுமோ என்ற அச்சமும் அவருக்கு உண்டு.இரகசியப் பொலிசார் தமது பாதுகாப்புப் பிரிவினர் மீது ஏற்படுத்தும் அழுத்தங்கள் தமது பாதுகாப்புக் குறித்த அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடிக்கடி குற்றம்சுமத்திவருகிறார். அரசாங்கத்துடன் " சகவாழ்வு" அரசியல் நடத்த முயலும் தனக்கு இவை பெரும் சங்கடத்தை ஏற்படுத்துவதாகவும் கூறிவருகிறார்.

அதேவேளை, அநுருத்த ரத்வத்த அவரது பிள்ளைகள் போன்ற தனக்கு மிக நெருக்கமானவர்கள் கூட சிறையில் அடைக்கப்பட்டிருக்கையில் எதுவும் செய்யமுடியாத கையறுநிலையில் காணப்படுவதும் சனாதிபதி சந்திரிகாவுக்கு பெரும் எரிச்சலை மூட்டக் கூடும். இவ்வாறு சிறையில் அடைக்கப்பட்டிருப்போரைமரபையும் மீறிச் சென்று பார்வையிட்டதைத் தவிர வேறொன்றும் அவரால் செய்ய முடியவில்லை.

தமது ஆதரவாளர்கள் பலர் பொலிஸ் அழுத்தங்களுக்கு உள்ளாவதாகவும் அவர் அடிக்கடி குற்றம்சாட்டிவருகிறார்.இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைத் கவிழ்த்து புதியதொரு தேர்தலை நடத்தி ஆட்சியைக் கைப்பற்றும் கனவுக்கு குறுக்கே நிற்பதும் இந்த உள்துறை அமைச்சுத்தான். பொலிஸ் அதிகாரமில்லாது தேர்தலைச் சந்திப்பது பயனற்றது என்பது பொதுசன ஐக்கிய முன்னணி கடந்த காலங்களில் கண்ட அனுபவப் பாடமாகும். உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெறுவதற்காகக் கூட சில மாவட்டங்களுக்கு தேர்தல் ஆணையாளர்களின் அறிவுறுத்தல்களையும் மீறி வசதியான பொலிஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்து வெற்றி வாய்ப்பைப் பெற்றுக் கொண்ட அனுபவம் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு உண்டு.

கடந்த தேர்தலில் இராணுவத்தை உபயோகித்துத் தேர்தல் வன்முறைகளைப் புரிந்த பின் பொலிஸ் அதிகாரம் பறிபோனதால் இப்பொழுது மாமனாரே சிறையில் அடைபடவேண்டிய நிலை ஏற்பட்டது.

எனவே தேர்தல் ஒன்றுக்குப் போக முன் எவ்வாறாயினும் பொலிஸ் அதிகாரத்தைத் தம்வசப்படுத்த பொ.ஐ.முன்னணி விரும்புகின்றது. இதற்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை

**வேலவன்**



இந்நிலையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒன்றில் அரசியலமைப்பு ரீதியாக நீதிமன்றம் சென்றிருக்க வேண்டும். அல்லது தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆட்சியைக் கலைத்திருக்க வேண்டும்.

கட்சியினதும், அவரதும் பலவீன நிலையே அவ்வாறானதொரு நடவடிக்கைக்குச் செல்லவிடாது தடுத்துள்ளது.

இப்பலவீன நிலையில் உள்துறை அமைச்சை தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தம்வசப்படுத்த முடியுமா? என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகும்.

சனாதிபதியின் அரசியல் ஆலோசகர் அநுரா பண்டாரநாயக்க 'விரைவில் முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களைச் சனாதிபதி தம்வசம் எடுத்துக் கொள்வார். இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவார்'. என்றெல்லாம் தமது ஆதரவாளர்கள் மத்தியில் முழங்கித்திரிகிறார். சனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் 'அவையெல்லாம் அநுராபண்டாரநாயக்காவின் சொந்தக் கருத்துக்கள்' எனக் கூறிவருகின்றார். இம் முரண்பாட்டுக்குக் காரணம் சனாதிபதியினதும் அவரது கட்சியினதும் பலவீனமான நிலையாகும்.

இப்பலவீனம் நீங்கும் வரை அவரது கட்சியினர் கோரினாலும் அவரே விரும்புகின்ற போதும் சனாதிபதியின் அதிகாரத்தைப் பயன்படுத்துவதால் அவர்களுக்கு எவ்வித பலனும் கிட்டிவிடாது.

✠ ✠ ✠

# டோக்கியோ மாநாடு தொடர்பாக கருத்துத் தெரிவிக்க சனாதிபதி மறுப்பு!

நடந்து முடிந்துள்ள டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் மாநாடுபற்றி ஜப்பான் அரசு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கருத்துக் கூறுமாறு கேட்டதற்கு அவர் அதனைக் கவனத்தில் எடுக்க வில்லை எனக் கூறப்படுகின்றது.

சனாதிபதியின் வெளிநாட்டுக் கொள்கைபற்றி அவரின் ஆலோசகரான கதிர்காமருக்கூடாக அவரின் கருத்துக் கோரப்பட்டது. இரு கட்சிகளினதும் கருத்துக்கள் வேறாக இருப்பினும் ஒரேநாடு என்றவகையில் இவ்வாறான வெளிநாடுகளின் உதவிகளைப்பெற கூட்டாகச் செயற்பட்டிருக்க வேண்டும் என்பதே ஜப்பானின் கருத்தாகும் எனக் கூறப்படுகின்றது.பிரதமரின் உரைக்குப் பின் சனாதிபதியின் செய்தி ஒலிபரப்ப எண்ணியிருப்பதாகக் கூறிய அரச செய்தியாளர், ஜப்பான் மாநாட்டிற்குப் புறப்பட முன்பு சனாதிபதியைச் சந்திக்க பிரதமர் ரணில் முயற்சி எடுத்த வேளை சனாதிபதி அதனையும் தட்டிக்கழித்து விட்டதாகவும் கூறப்படுகின்றது.

மேலும் ரணில் அரசாங்கமும் ஜப்பான் அரசும் பேசி முடித்துள்ள வேளையில் எனது சந்திப்பில் ரணிலுக்கு பயனேதும் கிடையாது எனவும் சனாதிபதி தெரிவித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பத்து வருடங்களில் 1200 யானைகள் கொலை

நாட்டில் கடந்த பத்து வருடங்களில் 1200யானைகள் கொல்லப்பட்டுள்ளதாக வனபரிபாலன திணைக் களம் தெரிவித்துள்ளது. நாட்டில் தற்போது 3000 யானைகளே உள்ளன. யானைகளின் சராசரி இறப்பு 4 வீதமாகவும் பிறப்பு 6வீதமாகவும் உள்ளன.

வனபரிபாலன திணைக்களத்திற்குச் சொந்தமான காட்டுப் பகுதிகளைத் தாண்டி யானைகள் நடமாடுவதால் பெரும் ஆபத்தை அவை எதிர்நோக்குவதாக வனபரிபாலன திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். யானைகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி அவற்றினால் ஏற்படும் அழிவுகளைத் தடுப்பதுடன் யானைகளைப் பாதுகாத்து பராமரிப்பதற்கும் விசேதிட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக அவ்வதிகாரி கூறினார்.

# டோக்கியோ மாநாடு;

# புலிகளின் நிலைப்பாடு புரிந்துகொள்ளப்பட்டது!

இலங்கைக்கு உதவி வழங்குவதற்கான டோக்கியோ மாநாடு திட்டமிட்டவாறு நடைபெற்றுள்ளது.

விடுதலைப்புலிகள் இம்மாநாட்டில் பங்கேற்காமையானது இம்மாநாட்டின் ஏற்பாட்டாளர்களாகிய ஜப்பான் உட்பட பலருக்கும் ஏமாற்றத்தை அளித்திருந்தது. இதனை ஜப்பான் பிரதமர் யுனிசிரோ கொய்சுமி தனது தலைமை உரையிலும் சுட்டிக்காட்டியிருந்தார். அவர் "விடுதலைப்புலிகள் இன்று எம்முடன் இல்லாதது ஏமாற்றம் தரும் விடயம்" எனக் குறிப்பிட்டிருந்தார். ஆயினும் சில மாற்றங்களுடன் மாநாடு ஆரம்பமாகியிருந்தது.

குறிப்பாக, சமாதான ஏற்பாட்டாளர்களான நோர்வே அரசின் சார்பில் மாநாட்டில் கலந்து கொள்வதாக இருந்த நோர்வேயின் வெளிவிகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன், பிரதிவெளிவிவகார அமைச்சரும், சமாதான முயற்சிகளைத் தலைமை தாங்கி நடத்துபவருமான விதார் கெல்ஹேசன் ஆகியோர் மாநாட்டில் பங்கேற்கவில்லை. நோர்வேத் தரப்பில் இராஜதந்திரிகள், அதிகாரிகள் மட்டப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகள் மாநாட்டில் கலந்து கொள்வர்களா? இல்லையா? என்பதை மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் இறுதி நேரம்வரை காத்திருந்ததுபோல், இந்தியாவும் காத்திருந்துவிட்டு, புலிகள் பங்கேற்கப் போவதில்லை என்ற நிலையில் மாநாட்டில் பங்கேற்கத் தீர்மானித்த இந்தியா ஜப்பானிலுள்ள தனது அதிகாரிகளை மாநாட்டிற்கு அனுப்பியிருந்தது.

இதேவேளை, விடுதலைப் புலிகள் பங்கேற்காததினால், அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் மாநாட்டில் ஆற்றவிருந்த உரையினை இரத்துச் செய்திருந்தார். இவ்வுரையானது இதுவரையிலான சமாதான முயற்சிகளிலும் காணப்பட்ட முன்னேற்றம் பற்றியதான நீண்ட உரையாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

இவ்வாறாகப் புலிகள் மாநாட்டில் பங்கேற்காததினால் மாநாட்டில் சில மாற்றங்கள் ஏற்பட்ட அதேவேளை, இம்மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்கேற்காதுபோனால் விளையக்கூடியதென பலர் எதிர்பார்த்திருந்த நிகழ்வுகள் இடம்பெறாமல் போனமையானது விடுதலைப்புலிகளுக்கு எதிரான சக்திகளுக்கும் ஆய்வாளர்களுக்கும் ஏமாற்றம் அளிக்கும் ஒன்றாகவே நிச்சயம் இருந்திருக்கும் என்பதில் வியப்பில்லை.

அதாவது, டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் கலந்து கொள்ளாதுபோகும் பட்சத்தில், விடுதலைப் புலிகள் கடும் கண்டனத்திற்கு உள்ளாகக் கூடும். அதிலும் குறிப்பாக, அமெரிக்காவின் கடும் சீற்றத்திற்கு உள்ளாகக் கூடும் என்றே இவர்கள் எதிர்பார்த்திருந்தனர். இதற்கு கடந்த நவம்பரில் நடந்த ஒஸ்லோ மாநாட்டில் அமெரிக்காவின் பிரதி இராஜங்க அமைச்சர் ரிச்சட் ஆர்மிரேஜ் தெரிவித்திருந்த கருத்துக்களும் காரணமாக இருந்தன.

ஒஸ்லோ மாநாட்டில் பேசிய அமெ. பிரதி இராஜங்க அமைச்சர் ஆர்மிரேஜ், "விடுதலைப் புலிகள் வன்முறைகளையும், பயங்கரவாத்தையும் பயன்படுத்துவதைக் கைவிட்டுவிட்டதாகப் பிரகடனப்படுத்த வேண்டும்" எனத் தெரிவித்திருந்தார். இது விடுதலைப் புலிகள் மீது அமெரிக்கா அழுத்தத்தைப் பிரயோகிப்பது போன்றதாக இருந்தது.

ஆனால், திரு. ஆர்மிரேஜின் இக்கூற்றுக்கள் குறித்து தமது ஆட்சேபத்தை ஒஸ்லோவிலேயே வெளியிட்டிருந்தனர். புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் "வன்முறை, பயங்கரவாதம் என்ற விடயங்களுக்கு அமெரிக்கா எந்த வரைவிலக்கணத்தைக் கொண்டுள்ளது என்பது எமக்குத் தெரியவில்லை. ஆனால், எமது செயற்பாட்டை வன்முறை, பயங்கரவாதம் என்ற பெயருடன் வியாக்கியானப்படுத்துவதை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. யுத்தச் செயற்பாட்டை இந்த வரைவிலக்கணத்திற்குட்படுத்துவது பொருத்தப்பாடாற்றது" என ஆர்மிரேஜ்சின் கூற்றிற்குப் புலிகளின் ஆட்சேபத்தை வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில், டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகளைப் பங்குபற்றச் செய்வதற்கு. ஜப்பான், நோர்வே மற்றும் மேற்குலக நாடுகள் சில மேற்கொண்ட பல இராஜதந்திர முயற்சிகள் தோல்வியடைந்துள்ள நிலையில், அமெரிக்கா தனது புலிகள் மீதான கடும் கண்டனத்தை முன்வைக்கும் என்றே எதிர் பார்த்திருந்தனர். ஆனால், அமெரிக்கா ஒஸ்லோ மாநாட்டைவிட புலிகள் குறித்து தாழ்ந்த தொனியிலேயே பேசியிருப்பதானது பலரின் எதிர்பார்க்கைக்கு மாறானதொன்றாகவே அமைந்துள்ளது.



இதனைக் கொண்டு அமெரிக்கா விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஓரளவு புரிந்து கொள்ளத் தொடங்கியுள்ளது என்பதை உணரக்கூடியதாகவுள்ளது. இதில் முக்கியமான விடயம் என்னவெனில், விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதான முயற்சிகளைக் குழப்பவோ அன்றி விரோதமாகச் செயற்படவில்லை என்பதும், விடுதலைப் புலிகள் இயக்கம் கோரிய இடைக்கால நிர்வாகத்தின் அவசியம் குறித்து புலிகளின் நிலைப்பாட்டிலுள்ள நியாயத்தன்மையை ஓரளவேனும் அமெரிக்கா புரிந்துகொள்ளத் தொடங்கியுள்ளது என்றே கருத இடமுண்டு.

இதனை ஆர்மிரேஜின் டோக்கியோ உதவி வழங்குவோர் மாநாட்டின் உரை ஓரளவிற்குப் பிரதிபலிப்பதாகவே உள்ளது. அதாவது, ஆர்மிரேஜ், விடுதலைப் புலிகள் மீது குற்றச்சாட்டுக்கள் எதனையும் பெரியளவில் சுமத்தாததோடு மட்டுமல்ல, விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டிற்கு மாறாக அவர்களை நிர்பந்திக்கக் கூடிய விடயங்கள் எதனையும் முன்வைக்கவில்லை என்றே கூறலாம். அதாவது, தமது உரையில், விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் மீண்டும் கலந்து கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையையே முன்வைத்தார்.

இது புலிகளின் நிலைப்பாட்டிற்கு மாறானதொரு விடயம் அல்ல. விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு தயாராக இருப்பதற்கான நிலைப்பாட்டைக் கொண்டதாகவே உள்ளது.

சமாதான முயற்சிகளில் இருந்து வெளியேறுவதாகவோ, சமாதான நடவடிக்கைகளில் பங்குபற்றப்போவதில்லை என்றோ அது சொல்லவில்லை.

இந்த வகையில் பார்க்கையில், விடுதலைப் புலிகள் இயக்கம், டோக்கியோ மாநாட்டில் தாம் பங்குபற்ற முடியாமல் போனமைக்கான காரணத்தை சர்வதேச சமூகத்திடம் விளக்குவதில் வெற்றி கண்டுள்ளது என்றே கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு இல்லாதுவிடில் டோக்கியோ மாநாட்டில் புலிகள் கண்டனத்திற்கு உள்ளாகியிருப்பது தவிர்க்க முடியாததாகியிருக்கும்.

அது மாத்திரமல்ல, விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகம் குறித்த நிலைப்பாட்டிற்குச் சர்வதேச சமூகத்தின் ஆதரவும் ஓரளவு கிடைக்கப்பெற்றுள்ளது என்பதை அமெரிக்கா பிரதி அமைச்சரின் பேச்சில் இருந்து ஓரளவிற்குப் புரிந்து கொள்ளக் கூடியதொரு நிலையைக் கணக்கூடியதாகவுள்ளது.

அவர் தனது பேச்சில், "இரு தரப்பும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டிய தருணம் இதுவாகும். சமஷ்டிக் கட்டமைப்போ உள்ளக சுயநிர்ணய உரிமையோ அவர்கள் எதை இறுதியாக அடையப் போகின்றார்கள் என்பதை மட்டுமல்லாது, இவ்விலக்கை அடைவதற்கு இட்டுச் செல்லக்கூடிய இடைக்கால ஏற்பாடுகளிலும், இணக்கப்பாட்டிற்குவர வேண்டிய தருணம் இதுவாகும் என்றே நான் நம்புகின்றேன்" எனத் தெரிவித்திருந்தார்.

இக்கூற்றுக்களானது, இடைக்கால நிர்வாக ஏற்பாட்டின் அவசியம் குறித்த விடுதலைப் புலிகளின் கோரிக்கையை அமெரிக்கா விளங்கிக் கொண்டுள்ளதாகவே அர்த்தம் கொள்ளத்தக்கதாகும். அத்தோடு, ஆர்மிரேஜ் "இலங்கை அரசும் சமாதானத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்த கடின நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருக்கும்" எனக் குறிப்பிட்டமையானது அரசாங்கம் முன்னேற்றகரமான நடவடிக்கைகளைத் துணிந்து மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துவதாகவே பொருள் கொள்ளத்தக்கதாகும்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு குறித்து சிறிலங்கா அரசு பரிசீலக்க வேண்டும் என நோர்வே பிரதமர் ஜப்பானில் வைத்து கருத்து வெளியிட்டபோதே சர்வதேச சமூகம் குறிப்பாக மேற்குலகம் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டினையும், இது பரிசீலனைக்கு உட்படுத்தக்கூடிய விடயம் என்ற நிலைப்பாட்டைக் கொள்ளக்கூடும் என்பது உணரப்பட்டே இருந்தது.

சிறிலங்கா அரசாங்கமும், மேற்குலகம் ஆதரவானதொரு நிலைப்பாட்டை மேற்கொள்ளலாம் என்ற நிலையிலேயே புனரமைப்பு, அபிவிருத்திப் பணிக்கான சபை ஒன்று குறித்த ஆலோசனையையும் முன்வைத்தது. இதனைப் புலிகள் நிராகரித்ததைத் தொடர்ந்து இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து பேச்சுக்கள் நடத்துவது குறித்துப் பிரஸ்தாபிக்கத் தொடங்கியிருந்தது. அதாவது, புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து டோக்கியோ மாநாட்டின் பின்னர் அரசாங்கம் பிரஸ்தாமிக்கும் என அமைச்சர் பீரிஸ், மொறகொட போன்றோர்கள் பேசியிருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும், அமெரிக்கா, இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வில் அரசாங்கத்திற்கும் - சனாதிபதிக்கும் இடையிலுள்ள முரண்பாட்டினையும், சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகளில் தாம் அதிருப்தி கொண்டிருப்பதாகவும் அண்மைக்காலத்தில் வெளிப்படுத்தி வந்துள்ளது. இந்த வகையில் டோக்கியோ மாநாட்டிலும் ஆர்மிரேஜ் இதனை வெளிப்படுத்தத் தவறவில்லை.

"எந்தவொரு பல்கட்சி சனநாயக அமைப்பிலும் சிக்கல்கள் இருக்கும். ஆகவே அதிகாரத் தொடர்பில் கட்சிகளுக்கு இடையில் கருத்து முரண்பாடு இருப்பினும் பொதுவான நோக்கிலும், தீர்விலும் ஒற்றுமை இருக்கின்றது என்பதை விடுதலைப் புலிகளுக்கும், சர்வதேச உதவி வழங்கும் நாடுகளுக்கும் நிரூபிக்க வேண்டிய சவால் சனாதிபதிக்கும், பிரதமருக்கும் இருக்கின்றது. அதற்குச் சனாதிபதியின் பங்கு முக்கியமானது. உண்மையில் சனாதிபதியின் விருப்பிலேயே இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வு தங்கியிருக்கலாம்" என ஆர்மிரேஜ் தெரிவித்துள்ளமையானது இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வு முயற்சியின் சனாதிபதி சந்திரிகாவின் பங்கு பூரண நம்பிக்கையூட்டுவதாக இல்லை என்ற நிலைப்பாட்டையே வெளிப்படுத்துவதாய் உள்ளது.

அத்தோடு, விடுதலைப்புலிகள் இயக்கம் சமாதான முயற்சிகளில் நம்பிக்கை கொண்டு செயற்படுவதற்கும், தீர்மானங்களை மேற்கொள் வதற்கும் சனாதிபதியின் நிலைப்பாடு முட்டுக்கட்டையாக உள்ளது என்பதும் அமெரிக்காவினால் புரிந்து கொள்ளப்பட்டதொன்றாகியுள்ளது.

இந்த வகையில், டோக்கியோ மாநாடு இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் விடுதலைப் புலிகளிடம் இருந்து எதிர்பார்க்கப்படுபவை மட்டுமல்ல, சிறிலங்கா சனாதிபதி, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் என்பனவற்றிடம் இருந்து எதிர்பாக்கப்படுபவற்றையும் சுட்டிக்காட்டியுள்ளமை இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த விடயத்தில் சிறிலங்கா அரசின் பங்கு, பணிகள் போதுமானதாக இல்லை என்பதை பிரஸ்தாபிக்கத் தொடங்கியுள்ளதையே வெளிக்காட்டுவதாய் உள்ளது.

இந்த வகையில் பார்க்கையில், டோக்கியோ மாநாட்டில் பங்கேற்றவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளையும், விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்பனவற்றைப் புரிந்து கொண்டுள்ளனர் என்றே கருதலாம். இதன் காரணமாகவே டோக்கியோ மாநாட்டில் சிலர் எதிர்பார்த்தது போன்ற கடும் கண்டனங்கள் புலிகள் மீது தெரிவிக்கப்படாது கவலை மட்டுமே தெரிவிக்கப்பட்டது. அத்தோடு இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளில் சிறி லங்கா ஆட்சியாளர்களுக்கான ஆலோசனைகள் சிலவும் விமர்சனங்கள் சிலவும் தெரிவிக்கப்பட வேண்டிய நிலை உருவாகியது.

**ஜெயராஜ்**

## கிளி. கமக்கார அமைப்புகளுக்கு நீரிறைக்கும் இயந்திரம் அன்பளிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறப்பாக இயங்கிவரும் கமக்கார அமைப்புகள் மற்றும் திட்டக் குழுக்களுக்கு உணவு விவசாய ஸ்தாபனத்தினரால் நீர் இறைக்கும் இயந்திரமும், தெளி கருவிகளும் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருகையில், நாளை காலை 10.00 மணிக்கு மேற்படி பொருட்கள் கிளி. மாவட்ட அரச செயலக மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதெனவும் அன்றைய தினம் இவ்வமைப்புக்களைச் சேர்ந்த தலைவர்/செயலாளர்களை தவறாது கலந்து கொண்டு மேற்படி பொருட்களை கையேற்றுச் செல்லும் வண்ணமும் கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் நா. வேதநாயகன் வேண்டியுள்ளார்.

அத்துடன் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மேற்படி அமைப்புகளுக்கு 10 நீரிறைக்கும் இயந்திரங்களும் 121 தெளிகருவிகளும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்கு 03 நீரிறைக்கும் இயந்திரங்களும் 80 தெளிகருவிகளும், பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிற்கு 10 நீரிறைக்கும் இயந்திரங்களும் 141 தெளிகருவிகளும், பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்கு 03 நீர் இறைக்கும் இயந்திரங்களும் 30 தெளிகருவிகளும் வழங்கப்படவுள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (சோ)

## வேகமாகச் செல்லும் வாகனங்களால் வீதிகளில் செல்வோருக்கு அசௌகரியம்

(அலுவலக செய்தியாளர்)

பெருவீதிகளில் வேகமாகச் செல்லும் வாகனங்களால் வீதியில் பயணிக்கும் அனைவரும் தினம் தினம் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருவதனைக்காணக்கூடியதாகவுள்ளது.

நேற்று பி.ப.4.15 மணியளவில் கிளி. டிப்போ வீதியால் வேகமாக பயணித்த வாகனம் ஒன்றின்காரணமாக சிறிது நேரம் எவ்வாறு பயணிப்பதென்று தெரியாது அவ்வீதியால் பயணித்த மக்கள் திணறியதை அவதானிக்கக்கூடியதாகவிருந்தது.

ஒருபுறம் உள்ளத்தின் அவலமும் அதே நேரம் வேகமாக வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளால்மேலெழும் புழுதிகாரணமாகவும் தினம் தினம் வீதியில் பயணிக்கும் மக்கள் இந்த அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

(சோ)

# பேரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் தேவைகள் குறித்து மதிப்பீடு

## நோர்வேத் தூதுவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

**தமிழர் தாயக எல்லைப் பரப்புக்களில் போரினால் பாதிக்கப்பட்ட தேவைகளை ஒட்டிய மதிப்பீடு ஒன்றினை யாழ்ப்பாண மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் இலங்கைக்கான நோர்வேத் தூதுவருக்கு நேற்று முன்தினம் அனுப்பியுள்ளது.**

அதில் கூறப்பட்டுள்ளதாவது; கடந்த 20 ஆண்டுகளாக கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதல்களில் பெரும்பான்மையான தமிழ் மக்களின் வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன அல்லது பெரும் சேதங் களுக்கு உள்ளாகியுள்ளன. உள்ளூரில் இடம்பெயர்ந்தோருக்கு ஐ.நா. சபையின் கோட்பாடுகளுக்கு அமைய தமது வீடுகளை திருத்திக் கட்டுவதற்கு போதிய நிதியை வழங்குவது சிறிலங்கா அரசின் கடமையாகும்.

பேரழிவுகளுக்கு உட்பட்ட வட-கிழக்குப் பகுதிகளில் மிக விரைவில் மக்கள் மீள்வாழ்வு பெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். அபிவிருத்தியைப் பொறுத்த வரையில் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கும் வட-கிழக்கு மாகாணங்களுக்கும் இடையே இடைவெளி காணப்படுகின்றது. இவ் இடைவெளி நிரப்பப்பட வேண்டும்.

மக்களுக்குரிய நிதி, நீதி நியாய அடிப்படையில் வழங்குவதில் அரசிற்கு பொருளாதார நெருக்கடி இருப்பின் பாதிக்கப்பட்டோருக்கு மதிப்பிடப்பட்ட இழப்பீட்டிற்குப் பதிலாக உத்தரவாத பிணைகளை நிதி வழங்கும் முகவர்கள் ஊடாக வழங்க வேண்டும். அத்தோடு, வட்டியற்ற கடன்களும், கட்டடங்களை மீளக் கட்ட நிதி உதவி விரைந்து வழங்கப்பட வேண்டும். முழு இழப்பீடு வழங்க முடியாமைக்கு விளக்கம் தரும் முறையில் நீண்ட பந்திகளைத் தந்து ஐ.நா. மன்றத்தின் வழிகாட்டும் கோட்பாட்டுகளை தட்டிக்கழிக்க நாம் இடமளிக்கக் கூடாது.

இயல்பான வாழ்வை அடைவதற்கு முதன்மை கொடுக்கின்ற விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். அவையாவான, மிதிவெடி பகுதிகள் முற்றாக அகற்றப்பட்ட நிலையில் வடக்கு-கிழக்கில் வசிக்கின்ற பெரும்பான்மை மக்கள் மீண்டும் குடியமர்வதையொட்டி உடனடியாக நிவாரண உதவிகளை மனிதாபிமான முறையில் வழங்குவதற்கு மனிதநேய அடிப்படையில் செயற்பட வேண்டும். தடுப்பு நிலையிலும், நோய் தீர்க்கும் நிலையிலும் வடக்கு - கிழக்கில் நலத்துறை கவலை தரும் அளவிற்குப் பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது.

இன்றைய நிலையில், யாழ். போதனா மருத்துவமனையில் நோயாளர்களின் உடனடித் தேவைகளை நிறைவு செய்ய வழியற்றுள்ளது. வர்த்தக சுற்றாடலில் மருத்துவமனை அமைந்துள்ளமை நோயாளர்களுக்கு ஏற்றதல்ல. மருத்துவமனையில் ஏற்படும் மக்களின் நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கு காற்றோட்டம் உள்ள, விரைவில் உடல் நலம் பெறத்தக்க மருத்துவ அலகுகள் அமைப்பது அவசியம்.

யாழ். பண்ணையிலுள்ள மார்பு நோய் மருத்துவமனையும், காங்கேசன்துறையிலுள்ள எலும்புருக்கு நோய் சிகிச்சை நிலையமும் அழிக்கப்பட்டுள்ளன. இவை மீண்டும் கட்டப்பட வேண்டும். தெல்லிப்பளையிலுள்ள புற்று நோய் மருத்துவமனை ஓரளவு திருத்தப்பட்டுள்ளது. ஆயினும், இம்மருத்துவமனையை மீளவும் நோயாளர் சிகிச்சைபெறும் வகையில் தரம் உயர்த்தப்பட வேண்டும். நூற்றுக்கணக்கான புற்று நோயாளர்களின் அவலங்களைத் தீர்க்க அல்லது குறைக்க இந் நோய்க்குரிய சிறந்த மருத்துவர்கள் நியமிக்கப்பட வேண்டும். யாழ். மாவட்டத்திற்கு ஓர் உளவியல் மருத்துவர் பிரிவு இன்றியமையாததாகும். தெல்லிப்பளை மாவட்ட மருத்துவமனை எல்லைப் புறத்தில் தேவையான வசதியுடன் ஒரு புதிய கட்டடம் அமைக்கப்பட வேண்டும்.



கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் திருக்குறள் மாநாட்டு இறுதி நாள் நிகழ்வில் இடம் பெற்ற பண்பாட்டு ஊர்வலத்தினது ஒரு காட்சி.

# இரத்ததானம்

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய பயிலுநர்கள் 50பேர் இரத்ததானம் செய்துள்ளனர்.

வவுனியா பொது வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்தம் பற்றாக்குறையாக உள்ள நிலையில் இம்மாணவர்கள் இரத்த தானம் செய்துள்ளனர்.

இவ் இரத்ததான நிகழ்வு வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி பீடாதிபதி க.பேணாட் தலைமையில் நடைபெற்றுள்ளது. (10)

# முல்லை. மகாவித்தியாலய தமிழ்த்தினப் போட்டிகள்

முல்லைத்தீவு மகாவித்தியாலய தமிழ்த்தின விழா கடந்த புதனன்று நடைபெற்றது.

மங்கல விளக்கினை முல்லைத்தீவு றோ.க.வித்தியாலய அதிபர் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை பாடசாலை விஞ்ஞான ஆசிரியர் க.ஜெயவீரசிங்கம் ஏற்றினார்.

முதன்மை விருந்தினராக திருமதி உதயராணி முனிஸ்வரனும் சிறப்பு விருந்தினராக கரை துறைப்பற்று கோட்டக்கல்வி அதிகாரி ஜி.எல். பரமேஸ்வரனும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஐந்து பிரிவுகளாகப் போட்டிகள் நடைபெற்றன. பேச்சு, எழுத்தாளர் திறனாய்வுப் போட்டி, பாஓதல், வாசிப்பு, கவிதை ஆக்கம், சிறுகதை ஆக்கம், வினாடிவினா ஆகிய போட்டிகள் நடைபெற்றன. கோட்ட மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டியும் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் வெகுவிரைவில் நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (20)

# எத்தியோப்பியாவை விட மோசமாக யாழ். அகதிமுகாம் சிறுவர்கள் உள்ளனர்

## - காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன

(கொழும்பு)

யாழ்ப்பாண அகதி முகாங்களில் இருக்கின்ற சிறுவர்கள் எத்தியோப்பியாவை விட மோசமான நிலையில் உள்ளனர் என்று சிறிலங்காவின் காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கான தனது பயணத்தை மேற்கொண்டு திரும்பிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடபகுதி மக்கள் கொதி நிலையில் வாழ்ந்து கொண்டிருக்க தெற்கில் அரசியல் வாதிகள் குளிரூட்டப் பட்ட அறையில் இருந்து கொண்டு உயர் பாதுகாப்பு வலயம் பற்றி பேசிக் கொண்டிருக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

வடக்கிற்கு செல்லும் அரசியல் வாதிகள் சிறிய கிராமங்களுக்குச் செல்வதில்லை என்றும் இதனாலேயே மக்களின் பிரச்சினைகளை அவர்களால் உணர முடியவில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இரத்தினக்கல் தொழிலுக்கு 3360 கோடி ரூபா இழப்பு!

(கொழும்பு)

வெள்ளம், மண் சரிவினால் சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினக்கல் கைத்தொழிலுக்கு 3360 கோடி மட்டில் நட்டம் ஏற்பட்டுள்ளதாக தேசிய இரத்தினக்கல் ஆபரண அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இரத்தினக்கல் தோண்டும் தொழிலில் ஈடுபட்டுள்ள 5760 ஊழியர்கள் வேலை இழந்துள்ளனர்.

இரத்தினக்கல் தோண்டப்படும் 12 ஆயிரம் மொத்தக் குழிகளில் 7200 குழிகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. நீர் இறைக்கும் 05 ஆயிரம் பம்பிகள் பழுதடைந்துள்ளன. இவற்றைத் திருத்த 120 இலட்சம் மட்டில் செலவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மெய்வன்மை வீரர்களுக்கு சிறப்புப் பயிற்சிக்கு ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட மெய் வல்லுனர் போட்டியில் சகல நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றி முதல் மூன்று இடங்களையும் பெற்ற வீர வீராங்கனைகளுக்கு சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் 18ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் மேற்படி பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதெனவும், முதல் மூன்று இடங்களைப் பெற்ற மேற்படி வீரவீராங்கனைகளை அன்றைய பயிற்சியில் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் க. கனகராசா வேண்டுகை விடுத்துள்ளார். (சோ)

# முள்ளியவளை வைத்தியசாலையில் 4170 நோயாளர் சிகிச்சை

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில் கடந்த மாதம் (வைகாசி) 4170 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலையின் வைகாசி மாத நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வெளி நோயாளர் பிரிவில் 2751 நோயாளரும், சாதாரண காய்ச்சலினால் 747 நோயாளர்களும், சிரங்கினால் 351 நோயாளர்களும், குருதிச் சோகையினால் 188 பேரும், மலேரியா காய்ச்சலினால் 60 பேரும், வயிற்றோட்டத்தினால் 10 பேரும், சிறு சத்திர சிகிச்சைக்காக 05 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்நோயாளர்களில் ஒரு அகவைக்குட்பட்ட 22 குழந்தைகள் சாதாரண காய்ச்சலுக்காக சிகிச்சை பெற்றுள்ளதாகவும், ஒரு அகவை தொடக்கம் ஐந்து அகவை வரையான சிறார்களில் சாதாரண காய்ச்சலினால் 278 சிறார்களும், மலேரியா காய்ச்சலினால் 11 சிறார்களும், வயிற்றோட்டத்தினால் 02 சிறார்களும் சிகிச்சை பெற்றிருக்கும் இதேவளை, முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையின் மகப்பேற்று மனையில் கடந்த மாதம் மகப்பேற்றுக்காக 35 கர்ப்பிணிகள் அனுமதிக்கப்பட்டு கடந்த மாதம் அதில் 22 சிசுப்பிறப்புக்கள் நிகழ்ந்துள்ளதாகவும் அதில் ஒரு சிசு இறந்து பிறந்துள்ளதாகவும் அவ்வைத்தியசாலையின் கடந்த மாத நிலவர அறிக்கையில் விபரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

# பொதுச்சந்தை முன் மணல்மேடு; போக்குவரத்து பெரும் பாதிப்பு!

முல்லைத்தீவு-முள்ளியவளை பிரதான வீதியில் முள்ளியவளை பொதுச் சந்தைக்கு முன்பாக சுமார் ஒன்றரை அடி உயரத்தில் மணல் மேடாகவுள்ளதால் அவ்விடத்தைத் தாண்டிச் செல்லும் வாகனங்களும் பாதசாரிகளும் பெரும் சிரமத்தை அனுபவித்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு இறுதியில் பெய்த பருவகால பெருமழை வெள்ளத்தால் அள்ளப்பட்டு வந்து தேங்கிய மணலே இவ்விடத்தில் மணல் மேடாகவுள்ளது.

இம்மணல் மேட்டைத்தாண்டிச் செல்ல முடியாது சிரமப் படும் மோட்டார் வண்டிகள்,துவிச்சக்கர வண்டிகள், பாதசாரிகள் இவ்வீதியில் ஓரமாக ஒற்றையடிப் பாதைபோல் அமைத்து அவ்விடத்தால் செல்வதால் அவ்விடத்தில் எதிரெதிராக வரும் வாகனங்கள் விபத்துக்குள்ளாகுவதுடன் பாதசாரிகளும் விபத்துக்குள்ளாகி வருகின்றனர். (ஆ)

# கிளி.மத்திய கல்லூரியில் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

மேற்படி கருத்தரங்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் பகல் 11 மணியளவில் கிளி, முல்லை தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர் ஞா.தே. இரட்ணகுமார் தலைமையில் இடம்பெற்றது. தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை நடாத்திய இக்கருத்தரங்கில் தொழில்நுட்ப வழிகாட்டல் சம்பந்தமாக நிகழ்வின் தலைவர் இரட்ணகுமார்,முறைசாராக் கல்வி தொடர்பாக கிளி.கல்விவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.செல்லத்துரை, கல்வி வழிகாட்டல் சம்பந்தமாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மார்க்கண்டு யாழ்ப்பாணம் தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர் கோ.கிருஷ்ண குமார் ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். (பா)

## பதிவு செய்ய வேண்டுகை

(முல்லை)

முல்லை. மாவட்டத்திற்குட்பட்ட கிராமங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராமங்களிற் குட்பட்ட மக்களில் இதுவரை காலமும் பிறப்புப் பத்திரம் பதிவு செய்யாதோர், பதிவு செய்து பத்திரம் கிடைக்கப் பெறாதோர் உடனடியாக அவ்வப்பகுதி கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கிராம செயற்பாட்டுக் குழுவினர் கேட்டுக் கொள்கின்றனர். (20)

## சிந்தனைக்கு



சுதந்திரப் போராட்டங்களாகவே மனித வரலாறு அசைகிறது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 11-06-2003

## இச் சீற்றம் ஏன்?

சமாதானப் பேச்சுக்களில் நோர்வேயின் ஈடுபாடு குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டியிருப்பதாக சிறிலங்கா சனாதிபதியின் ஆலோசகரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஸ்மன் கதிர்காமர் கூறியுள்ளார். இது லக்ஸ்மன் கதிர்காமரின் கூற்றுக்களாயினும், இதனை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கூற்றுக்கள் என்றே கொள்ளக்கூடியதாகும்.

ஆனால், டோக்கியோவில் கடந்த இரு தினங்களாக நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் முதன்நாள் நிகழ்வில் பேசிய பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க, நோர்வே அரசாங்கம் சமாதான முயற்சிகளுக்கு அளித்துவரும் அனுசரணைக்குத் தமது பாராட்டைத் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

இதேவேளை, டோக்கியோ மாநாட்டில் பங்கேற்ற அமெரிக்க வெளிவிவகார பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சட் ஆர்மிரேஜ்கும் நோர்வே அரசின் பங்கு பணிக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளதோடு, இப்பணி தொடரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அத்தோடு, நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு எதிர்கட்சிகளைவிட வேறு எவரிடம் இருந்தும் இதுவரையில் எதிர்ப்பு எதுவும் கிளம்பியதாகவும் இல்லை.

அது மாத்திரமல்ல சமாதான நடவடிக்கைகளில் ஒருதரப்பாக வுள்ள விடுதலைப்புலிகள் இயக்கமும் நோர்வே அரசின் பங்கு பணிகளைக் குறைக்கூறியதாக இல்லை. நோர்வே அரசுடன் நட்பு ரீதியிலான உறவைப் பாராட்டி வருவதாகவே தெரிகின்றது. இந் நிலையில் நோர்வே மீது சனாதிபதி சந்திரிகவிற்கு எழுந்துள்ள அதிருப்தி தான் என்ன?

நோர்வேயைப் பொறுத்து நாம் சமாதான பேச்சுவார்த்தை யாளராக மட்டுமே அழைத்தோம். ஆனால், தற்பொழுது நோர்வே மத்தியத்துவம் வகித்தல் என்ற நிலைக்கு உயர்ந்துள்ளதோடு, இலங்கையில் உள்நாட்டு விவகாரங்களிலும் தலையீடு செய்கிறது. மேலும் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டுடன் செயற்படுகிறது என்பது பொ.ஐ.முன்னணியின் குற்றச்சாட்டாகும். ஆனால், இக்குற்றச்சாட்டுக்கள் அர்த்தமற்றவையாகும்.

நோர்வே அரசாங்கம் மீது எதிர்க்கட்சியினர் அண்மைக் காலமாகக் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றபோதும், தற்பொழுது தீவிரமாகக் குற்றம் சுமத்தமுற்பட்டு நிற்கின்றமைக்கு நோர்வேப் பிரதமர் ஜப்பானில் வைத்து சிறிலங்கா பிரதமர் இடைக்கால நிர்வாகம் பற்றி பரிசீலிப்பதற்கு விடுத்த கோரிக்கையே காரணமாகும். இக்கோரிக்கை தொடர்பாக பொ.ஐ.முன்னணி கடும் கோபத்தைத் வெளிப்படுத்தியுள்ளதோடு இது குறித்து நோர்வே பிரதமருக்கு எதிராக அந்நாட்டு மன்னருக்குக் கடிதம் எழுதவும் அது முடிவு செய்துள்ளது.

ஆனால், சனாதிபதி சந்திரிகாவும் சரி, லக்ஸ்மன் கதிர்காமரும் சரி நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு எதிராக ஏன் செயற்பட வேண்டி வந்துள்ளது. ஏனெனில், நோர்வே அரசை சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதற்கென அழைத்தவர்கள் அவர் களே ஆகும். அவ்வாறானால், நோர்வே அரசை, அவர்கள் எதிர்ப் பதற்குக் காரணம் தான் என்ன? அதுவும் மிகவும் மோசமான வார்த்தைப் பிரயோகத்தின் மூலம், நடவடிக்கைகள் மூலமும் இவ் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். பொ.ஐ.முன்னணியின் முன்னாள் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான மங்கள சமரவீர "சல்மோன் மீன் தின்னிகள் இன்று உலகில் மிகவும் 'பிஸி' ஆகிவிட்டார்கள்" எனப் பேசும் அளவிற்கு நிலைமை சென்றுள்ளது.

இந்த வகையில் அவர்கள் இக்கடும் எதிர்ப்பை அவர்கள் வெளிப்படுத்துவ தற்கான காரணம் அவர்கள் கூறுவது போன்று தமது வரையறைகளை மீறி இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்வதோ? அன்றி விடுதலைப்புலிகளுக்கு ஆதர வாகச் செயற்படுகின்றமையோ? காரணம் இல்லை. உண்மையில் நோர்வே அரசின் சமாதான முயற்சிகளால் ரணில் விக்கிரம சிங்க அரசாங்கம் பலப்படுகின்றமையே சனாதிபதி சந்திரிகாவின் இச்சீற்றத்திற்குக் காரணமாகும்.

எடுத்துக் காட்டாக டோக்கியோவில் கடந்த இரண்டு நாட்கள் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் சிறிலங்கா அரசிற்கு எதிர்பார்த்த அளவிற்கும் அதிகமான நிதிஉதவி கிடைக்கப் பெற்றது. இவ் அதிகப்படியான நிதிக்கு இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளே காரணமாகும். இச் சமாதான முயற்சி வளர்ச்சி பெறுவதில் நோர்வேயின் பங்களிப்பு மிகவும் உயர்ந்ததாகும்.

இந்நிலையில் நோர்வேயை வெளியேற்றுவதன் மூலமே சமாதான முயற்சிகளைப் பலவீனப்படுத்தலாம் என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், அவரது ஆலோசகர் லக்ஸ்மன் கதிர்காமரும் கருதுகின்றனர். இதன் காரணமாகவே நோர்வே அரசு மீது சந்தேகங்களையும், கண்டனங்களையும் அவை தெரி விக்கின்றனர். ஆனாலும், உண்மையில் நோர்வே அரசு மீது சனா திபதி தெரிவிக்கும் கண்டனங்களும் குற்றச்சாட்டுகளும் சமாதான முயற்சிகளுக்கு எதிரானவையாகும். வேறு விதமாகக் கூறின் ரணில் அரசாங்கத்திற்கு எதிரானவையாகும். சுருக்கமாகக் கூறின் அதிகாரப் போட்டியின் விளைவாகும்.

# அனுசரணையாளர் என்கின்ற நிலைப்பாட்டை மீள் பரிசீலிக்க வேண்டிய தேவையில்லை

## நோர்வேத் தூதரகப் பேச்சாளர் தோமஸ் ஸ்ராங்லண்ட்

(கொழும்பு)

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் அனு சரணையாளர் என்ற நிலைப்பாட்டை மீள் பரி சீலனை செய்ய வேண்டிய தேவை இதுவரை ஏற் படவில்லை என்று கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகத்தின் பேச்சாளர் தோமஸ் ஸ்ராங்லண்ட் தெரிவித்துள்ளார்.

நோர்வே இராஜதந்திரிகளில் முக்கியமானோர் டோக்கியோ மாநாட்டிற்குச் செல்லாமை மற்றும் அரசியலில் சில நிகழ்வுகள், எதிர்க்கட்சியினரின் அதிருப்தி போன்ற காரணங்களால் நோர்வே தனது பங்களிப்பிலிருந்து விலகவுள்ளதாக வெளியாகும் தகவல்கள் குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் கூறினார். அத்தோடு, இவ்வாறான தகவல்கள் வெறும் ஊகங்களால் உருவாக் கப்பட்ட செய்திகளாக இருக்கலாம் என்று குறிப்பிட்டார்.

சமாதான நடவடிக்கைகளில் நோர்வே தொடர்ந்து அனுசரணையாளராகவே செயற்படும். டோக்கியோ மாநாட்டிற்கு நோர்வே முக்கிய அதிகாரி தலைமையிலான குழுவை அனுப்பி வைத்துள்ளது. இதனைவிட நோர்வே தொடர்பில் இலங்கையின் பிரதான எதிர்க்கட்சி தெரிவித் துள்ள கருத்துக் குறித்து இப்போதைக்கு எதுவும் கூறமுடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

# உயிரிழந்த படையினரின் குடும்பங்களுக்கும் கிடைக்கும் நிதியில் ஒரு பகுதியை வழங்க வேண்டும்

## சிறிலங்கா சனாதிபதி கூறுகின்றார்

(கொழும்பு)

ஜப்பான் உதவிவழங்கும் நாடுகள் மூலம் கிடைக்கும் நன்கொடைகளை நாட்டின் இறைமைக்காக உயிரிழந்த படையினரின் குடும்பங்களுக்கும் வழங்க வேண்டும் என சனா திபதி சந்திரிகா அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

தேசிய வீரர் தினவிழா வொன்றின்போது அங்கு உரையாற்றிய சந்திரிகா குமாரதுங்க, ஜப்பான் நன்கொடை நாட்டின் அனைத்துத் தேவைகளுக்குமே வழங்கப்படுகின்றது. 1995ஆம் ஆண்டிலும் அவ்வாறான அதிக நன்கொடைகள் கிடைக்கப் பெற்றன.

இந்நாட்டின் ஐக்கியத்திற்காக உயிரிழந்த வீரர்களின் எண்ணிக்கை 21 ஆயிரத்திற்கும் மேலாகும். காயமடைந்து அங்கவீனர்களாய் உள்ளோர் 10 ஆயிரம் பேர். அவர்களின் நலன்பேணலுக்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். சனாதிபதி நிதியிலிருந்து அவர்களுக்கு வழங்கப்படும் தொகை போது மானதல்ல. ஆகவே, ஜப்பான் நன்கொடை நிதியிலிருந்து அவர்களுகரும் உதவி வழங்கப்பட வேண்டும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

# திரைப்படக் கூட்டுத்தாபனம் தனியார் மயம்; அரசாங்கத்தின் முடிவிற்கு கடும் எதிர்ப்பு


(கொழும்பு)

தேசிய திரைப்படக் கூட்டுத்தானம் தொடர்ந்தும் அரச நிறுவனமாக இயங்க வேண்டும் என திரைப் படத்துறையைச் சார்ந்தோர் வலியுறுத்தியுள்ளனர்.

மேற்படி கூட்டுத்தாபனத்தைத் தனியார் மயமாக்குவதற்கும் இதன் விநியோக சபையை தனியார் நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைப்பதற்கும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக கொழும்பில் நடந்த கூட்டம் ஒன்றில் திரைப்பட நடிகர்களும், நடிகைகளுமே இவ்வாறு தெரிவித்துள்ளனர். திரைப்படத்துறையில் தற்போது நிலவும் குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றைப் போக்குவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் றஞ்சித் பனாண்டோ என்பவரை நியமித்துள்ளார். அவரிடம் தமது நிலைப்பாட்டை விபரிக்கும் நோக்கிலேயே மேற்படி கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

திரைப்படத்துறையின் குறைபாடுகளை ஆராய கைத் தொழில் அமைச்சின் செயலரை நியமித்தது கேலிக்குரிய விடயம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவின் பல்வேறு பிரிவுகளை மேம்படுத்த 15 குழுக்கள் அமைக்கப்பட்ட நிலையில் கூட்டுத் தாபனத்தைத் தனியார் மயமாக்குவது எந்தவிதத்திலும் பொருத்தமற்ற விடயம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# பேச்சிற்குப் பின்பே கிரிக்கெட் போட்டிகள்




## இந்திய விளையாட்டுத்துறை அமைச்சர்

இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் தான் இரு நாடுகளுக்குமிடையில் கிரிக்கெட் போட்டி நடத்துவது குறித்து முடிவு எடுக்கப்படும் என்று இந்திய விளையாட்டுத்துறை அமைச்சர் விக்ரம் வர்மா தெரிவித்தார்.

இந்தியா - பாகிஸ்தான் நாடுகள் ஆரோக்கியமான பேச்சுவார்த்தைக்கு அடித்தளம் அமைத்து வருகின்றன. அதன் முன்னேற்பாடாக இரு நாடுகளும் மோதும் கிரிக்கெட் போட்டியை நடத்தலாம் என்றுஇந்திய கிரிக்கெட் சபை சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. போட்டியை எப்போது நடத்தலாம் என்பது முதற்கொண்டு இந்திய கிரிக்கெட் சபை முடிவு செய்துவிட்டது. ஆனால், இந்திய கிரிக்கெட் சபை முயற்சிகளுக்கு மத்திய அரசு முட்டுக்கட்டையாகவுள்ளது.

மத்திய அரசு தனது முடிவை அறிவிக்காத நிலையில் தற்போது கிரிக்கெட் போட்டி நடப்பதில் சிக்கல் எழுந்துள்ளது. எனினும், இந்திய விளையாட்டுத்துறை அமைச்சர் இது குறித்து பரிசீலனை செய்வதாகக் கூறியுள்ளார்.



வடக்கு – கிழக்கு மாகாண உடற்பயிற்சிப் போட்டியில் பெண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவான கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை மாணவிகளின் உடற்பயிற்சி நிகழ்வைப் படத்தில் காண்க.

# முன்னர் கிடைத்த 70 மில்லியன் நிதியையே அரசு சரிவரப் பயன்படுத்தவில்லை

## ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன்

ஆறு கட்டப் பேச்சுக்கள் நடைபெற்றது இந்த ஆறு கட்டங்களில் பேசப்பட்ட அதிகமான விடயங்கள் அரசாங்கத்தால் நடைமுறைப் படுத்தப்படவில்லை. முதன் முதலாக நடைபெற்ற நிதி உதவி வழங்கும் மாநாட்டிலே 70 மில்லியன் அமெரிக்க டொலர் பணமாக வழங்கப் பட்டது. அந்தப் பணத்தைக் கூட அரசாங்கம் வடக்கு-கிழக்கிலேயே பாதிக்கப்பட்ட இடங்களை புனரமைப்புச் செய்கின்ற முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. இவ்வாறான செயற்பாட்டினால் விடுதலைப்புலிகள் இந்தப் பேச்சுவார்த்தைக்கும் மாநாட்டிற்கும் செல்ல முடியாமல் இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்திலேயே விடுதலைப்புலிகள் தமது வலிமையான எதிர்ப்பைத் தெரிவித்திருந்தது நல்லதென்றே கருதுகின்றேன். இவ்வாறு ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தற்போது 450 கோடி அமெரிக்க டொலரை அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்பது கேள்விக் குறியாகவுள்ளது இடைக்கால நிர்வாக சபை தருகின்றேன் என்று இந்த மாநாட்டிலே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். இடைக்கால நிர்வாக சபை ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிட்ட வேண்டும் அது கிட்ட வேண்டுமென்றால் எதிர்க்கட்சியும் ஆளும் கட்சியும் இணைந்து இடைக்கால நிர்வாகத்தைக் கொண்டு வருவதற்கான மசோதாவை ஆதரித்து வாக்களிக்க வேண்டும். இதற்கேற்ற ஆதரவு பாராளுமன்றத்தில் இந்த அரசாங்கத்திற்கு இல்லாததால் அவ்வாறானதொரு மசோதா தோல்வியடையும் என்பது எல்லோருக்கும் தெரிந்தவிடயம் ஆகவே இந்த இடைக்கால நிர்வாக சபையை அரசாங்கம் எப்படிக் கொடுக்கப் போகிறது என்பதை எம்மால் ஊகிக்க முடியாதுள்ளது என மேலும் அவர் கூறியுள்ளார்.

# ஹமாஸ் இயக்க சிரேஷ்ட தலைவர் இஸ்ரேலிய ஹெலி தாக்குதலில் காயம்

பாலஸ்தீன காசாப் பகுதியில் ஹமாஸ் இயக்க சிரேஷ்ட தலைவர் ஒருவர் பயணம் செய்த வாகனம் மீது நேற்று இஸ்ரேலிய உலங்கு வானூர்தி நடத்திய தாக்குதலில் அவர் படுகாயமடைந்தார்.




தாக்குதலால் எரியும் வாகனம்

அப்துல் அஸிஸ் அல்ரன் ரிசி என்பவரே காயமடைந்துள்ளார்.

எட்டு வயதுச் சிறுமி ஒருவரும் பெண் ஒருவரும் தாக்குதலில் பலியாகியதுடன் இருபது பேர் இத்தாக்குதலில் காயமடைந்துள்ளனர்.

# கால்நடை மருத்துவ சேவைக்கு ஆளணிப் பற்றாக்குறை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடை மருத்துவ சேவைத் திணைக்களத்திற்கு பெரும் ஆளணிப்பற்றாக்குறை நிலவிவருவதாகத் தெரியவந்துள்ளது.

மேற்படி மாவட்டத்தில் பலவருடகாலமாக இத்திணைக்களத்திற்கு ஆளணிப்பற்றாக்குறை நிலவி வருகின்றதெனவும் 16 கால்நடை மருத்துவ சேவை ஆளணியினருக்குப் பதிலாக 3 பேரே தற்போது இங்கு கடமைபுரிந்துவருவதாகவும் தெரியவந்துள்ளது. (சோ)

# சமாதான நடவடிக்கைகளை சர்வதேசம் அவதானிக்கும்

(லண்டன்)

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகளை உன்னிப்பாகக் கண்காணிக்க சர்வதேச நாடுகள் முன்வந்துள்ளன.

டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் முடிவில் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

'இலங்கையை மீளப் பெறுவோம்" என்ற இலங்கை அரசின் அபிவிருத்தித் திட்டத்தையும் சர்வதேச நாடுகள் அங்கீகரித்துள்ளன.

வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கான நிர்வாகக் கட்டமைப்பொன்றை உருவாக்க வேண்டும் என்றும், சமாதான நடவடிக்கையில் இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் நெகிழ்ச்சியுடன் செயற்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களின் உடனடித் தேவையைத் தாங்கள் உணருவதாகவும் விடுதலைப் புலிகளின் சம பங்கேற்போடு அனைத்துத் தரப்பினரின் நலன்களையும் கருத்திற்கொண்டு அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும் என்று மாநாட்டில் சர்வதேச நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

# மட்டு. கிரான் பகுதியில் இலவச கணினிப் பயிற்சி

மட்டக்களப்பின் கிரான் பகுதியில் வறிய மாணவர்களின் நலன் கருதி இலவச கணினிப் பயிற்சி நெறியை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடத்தி வருகிறது.

இக் கணினிப் பயிற்சியினை பெற்று அறுபதுக்கு மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். இதுபோன்ற கற்கை நெறிகள் மட்டக்களப்பின் பல்வேறு பகுதிகளிலும் மேற்கொண்டு மாணவர்கள் மத்தியில் கணினி சம்பந்தமான அறிவை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (லோ)

### ஜப்பானில்...

விஜயம் செய்த பொழுது அங்கிருந்த இலங்கையர் பிரதமரிடம் பல்வேறுபட்ட கேள்விகளைக் கேட்டதாகவும் அந்தக் கேள்விகளுக்குப் பிரதமர் உரிய பதிலை அளிக்கவில்லை. மாறாக பிரதமரின் பாதுகாப்புப் பிரிவினர் கேள்வி எழுப்பியோரைத் தாக்கினார்கள். இதனாலேயே அங்கு பிரச்சினை உருவாகியது என்றும் ஜே.வி.பி. வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளது.

## பலாலி முகாம் முன்னரங்கப் பகுதியில்

# விவசாயம் செய்வதற்கு தொடர்ந்தும் தடை விதிப்பு!

பலாலி முன்னரங்கப் பாதுகாப்புப் பகுதிகளை அண்டிய கிராமங்களில் மீளக்குடியேறும் குடும்பங்கள் விவசாயம் மேற்கொள்ள படைத்தரப்பு தொடர்ந்தும் அனுமதி மறுத்து வருகின்றது.

அத்துடன் முன்னரங்கப் பாதுகாப்பு அரண் பகுதியிலிருந்து 600 மீற்றர் தூரத்திற்கு அப்பாலேயே இவ் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என அறிவித்துள்ளது.

இதனால் பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயத்தை அண்டியுள்ள கிராமங்களைச் சேர்ந்த 600க்கும் அதிகமான குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. அத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் முன்னரங்கப் பாதுகாப்பு நிலப்பகுதிகளிலிருந்து 1000 மீற்றர் வரையான தூரப் பகுதியில் விவசாயம் செய்வதற்கிருந்த தடை உத்தரவை 600 மீற்றராக படைத்தரப்பு குறைத்துள்ளது. ஆயினும் புதிய விவசாயம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ள பகுதியில் மீளக்குடியமர வந்துள்ள மக்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கமுடியாதென படைத்தரப்பு அறிவித்துள்ளது. (27)

# 'உப்பில் உறைந்த உதிரங்கள்' வீடியோவைப் பறித்த படையினர்

## - மக்கள் மீண்டும் படையினரிடம் பறித்தனர்

மட்டக்களப்பு செட்டிபாளையம் கண்ணகை அம்மன் ஆலய ஆண்டுப பொங்கல் விழா நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற வேளை அங்கு தமிழீழத்தில் தயாரிக்கப்பட்ட "உப்பில் உறைந்த உதிரங்கள்" எனும் வீடியோப் படம் காண்பிக்கப்பட்ட வேளை, திடீரென சென்ற சிறிலங்காப் படையினர் படக்காட்சியை உடனடியாக நிறுத்துமாறு மிரட்டியுள்ளனர்

தாமே படக்காட்சியை நிறுத்தி வீடியோப்பட ஒலிநாடாவை வெளியே எடுத்து தொடர்ந்து இப்படம் காண்பிக்கக் கூடாதென எச்சரித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ஆலய பொங்கல் நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள் ஒன்று திரண்டு படையினரின் இம் மிரட்டலை கண்டித்துள்ளதுடன் ஒலிநாடாவை படையினரிடமிருந்து பறித்து தொடர்ந்து அப்படத்தைப் பார்வையிட்டுள்ளனர்.

மக்களின் எதிர்ப்பினைத் தொடர்ந்து படையினர் அவ்விடத்தை விட்டுச் சென்றதுடன் மக்களை கடுமையான வார்த்தைகளால் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மருத்துவ அதிகாரிகள்

# அரச மருத்துவ அதிகாரிகளின் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு

(கொழும்பு)

அரசாங்க மருத்துவ அதிகாரிகளின் தாய்ச் சங்கத்தினரால் நேற்று மேற்கொள்ளப்பட்ட வேலைநிறுத்தப் போராட்டங்களுக்கு யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அதிகாரிகள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதனால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை நேற்று ஸ்தம்பிதமடைந்தது.

தமது கோரிக்கைகளுக்கு உரிய பதிலை வழங்காவிட்டால் நாட்டின் அனைத்து வைத்தியசாலைகளிலும் போராட்டத்தை விஸ்தரிக்கப் போவதாக சங்கம் கூறியுள்ளது.

### ஜப்பானிய மாநாடு...

ம்பத்தில் ஏலப்பதிவு செய்யப்பட்ட உரையை வழங்குமாறு சனாதிபதி சந்திரிகாவை சிறிலங்காவிற்கான ஜப்பானிய தூதுவர் கேட்டிருந்தார். இதற்குப் பதிலளித்த சனாதிபதி எனக்குத் தெரியாத ஒன்றைப்பற்றி நான் பேச முடியாது என்று கூறியுள்ளார்.

### சிறி.சனாதிபதி...

வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கின் சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்பு மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்றே சர்வதேச சமூகத்தினர் வலியுறுத்துகின்றனர் எனவும், உரிய திட்டமிடல் இல்லாமல் அது நிறைவேறாது என்ற அச்சம் தனக்கு இருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

### டோக்கியோவில்...

அமுனுகம பல்வேறு நிபந்தனைகளுக்கமைய பல்வேறு வட்டிவீதத்தில் உதவித்தொகை வழங்கப்படுகிறது. இது ஏற்கனவே கடன்பட்டுள்ள இலங்கையை மேலும் கடனுக்குத் தள்ளுகின்ற ஒரு நிலைமையாகும் இந்நிதியைத் திருப்பிக் கொடுப்பதற்கான வருடாந்த தவணைக் கட்டுப்பணத்தைக் கூடக் கட்டக் கூடியளவிற்கு இலங்கையின் மொத்தத்தேசிய வருமானமும் போதாது. இதனால் இவ் உதவி நாட்டிற்கு நன்மையளிக்காது கடன் தொகையுடன் முதலாளித்துவ நாடுகளுக்கு உகந்த நிபந்தனைகளும் இணைந்துள்ளன.

இந்த நிதியை வைத்துக் கொண்டு என்னென்ன அபிவிருத்தித்திட்டங்களைச் செய்யவேண்டும் என்று உலகவங்கி வழங்கியிருக்கின்ற திட்டத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை அவற்றிற்கு கட்டுப்பட்டு போவதில்லை மாறாக தீவிர இடதுசாரி மக்கள் விடுதலை முன்னணியுடன் சேர்ந்து மாற்றுத்திட்டம் ஒன்றை நாங்கள் தயாரித்து வருகின்றோம்.

ஜப்பானிலே நடைபெற்ற மாநாடு ஊடகங்களுக்காக நடத்தப்பட்ட ஒரு கூத்தேதவிர வேறெதுவுமல்ல என மேலும் அவர் கூறினார்.

### கொழு.வெள்ள...

பொலிசாரினால் மேலதிக விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். இவர்களிடமிருந்து ஒன்பது மி.மீ கைத்துப்பாக்கி ஒன்றையும் கைப்பற்றியதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் தமிழர்களா? சிங்களவர்களா? என்பது குறித்து தெரியவரவில்லை என்றும், இவர்கள் குறித்த மேலதிக தகவல்களை வழங்க பொலிசார் மறுத்துவிட்டதாகவும் பி.பி.ஸி.யின் கொழும்புச் செய்தியாளர் தெரிவித்தார்.

### புலிகளுடன்...

அமெரிக்க டொலர் நிதி உதவி வடக்குக் கிழக்கு மற்றும் அதற்கருகாமையிலுள்ள ஐந்து மாவட்டங்களின் அபிவிருத்திக்காகச் செலவிடப்படும். நிதியைக் கையாள்வதில் எனது அரசாங்கம் எத்தகைய பொறுப்புணர்வோடு செயற்பட வேண்டும் என்பதை சர்வதேச நாடுகள் எனக்கு எடுத்துரைக்கலாம் என்றும் சிறிலங்காப் பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு : 1951 . 02 . 22



இறப்பு : 2003 . 05 . 13

அமரர்

திரு. விநாசித்தம்பி பாலசுப்பிரமணியம்

சாமிப்புலம் பூநகரி

எமது குடும்பத்தின் குலவிளக்காய் இருந்து
எம்மையெல்லாம் வாழ்வாங்கு வாழ வைத்து
விண்ணுலகம் சென்ற எமது அன்புத் தெய்வமே!
இவ்வையகம் உள்ளவரை – உம்
நினைவு எம்மைவிட்டு அகலாது
நமது கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாக்குகின்றோம்.

நாளை (12.06.2003) வியாழக்கிழமை நடைபெறும், வீட்டுக்கிரியைகளிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு, உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்,
சாமிப்புலம். பூநகரி.

(3318)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூன் மாதம் 11ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.